32 காலணா Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு


" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே "

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா $4\frac{1}{2}$ ரூபா

ஆசிரியர்:
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. வியாழன் 13-4-33

ப ந் தி வ ஞ் ச னை !



Courtesy of "Hindustan Times"

'பாதுகாப்புகள்' என்னும் பண்டத்தை பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் பரிமாறி யிருப்பதாக லார்ட் ஸ்நேல் கூறினர். சர்ச்சிலுக்கு இறைச்சியும், சாப்ரூ கோஷ்டிக்கு எலும்பை யும் பரிமாறி விட்டு, பந்தி வஞ்சனை யல்ல வென்று வியாக்யானம் செய்வது விந்தை தான். இந்தப் பாதுகாப்பு என்ற விஷயம், கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகக் கொஞ்சம் கொஞ்ச மாகக் குறைந்து வந்திருக்கின்றது ஓர் வேடிக்கை.

பாதுகாப்புகள் என்ற இறைச்சியைக் கத்தியால் எடுத்துத் தின்று களிக்கிறது சர்ச்சில் கோஷ்டி! வெறும் எலும்பைத் தட்டில் வைத்துக் கொண்டிருப்பவன் கத்தியால் கழுத்தை வெட்டிக் கொள்ள வேண்டியது தானே?

ஏப்ரல் 13ம் தேதி

இன்று ஏப்ரல் மாதம் 13ம் தேதி! ஜாலியன் வாலா தோட்டத்தில் படு கொலை நிகழ்ந்த செந்திருநாள் இன்றேயாகும். பாரத நாட்டிற்குப் புத்துயிர் உண்டாக்குவதற்காகவே ஆண்டவன் அந்தப் படுகொலை நாடகத்தை நடத்தினானோ என்னவோ? ஆகவே அந்தச் செந்திருநாளை பாரத மக்கள் அனைவரும் வருடந்தோறும் அநுஷ்டித்து வருகிறோம்.

உணர்ச்சி ஊட்டும் இந்தப் புனித தினத்தில் ஒவ்வொரு இந்தியனும் 'தேச பக்தி' என்ற கங்கணத்தைப் பூண்டு கொள்ள வேண்டும். நமது தாய்நாடு அடைந்துள்ள கீழான நிலையைப் பற்றி ஒவ்வொருவரும் சில நிமிடமாவது சிந்திக்க வேண்டும். இந்த நாட்டைக் கை தூக்கி விட ஒவ்வொருவராலும் என்னென்ன செய்ய முடியுமோ அவைகளை யெல்லாம் செய்வதற்கு இன்றைக்குச் சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அஞ்ஞானம் நாட்டில் ததும்பிக் கிடக்கிறது. எழுத்தறிவற்ற கூட்டம் ஏராளமாக இருக்கிறது. விடுமுறை நாட்களில் கிராமங்களில் இப்போது வீண் காலம் போக்கும் மாணவர்கள் தங்கள் சகோதரர்களுக்கு சிற்றறிவையாவது புகட்டுவதற்கு பிரயத்தனங்கள் செய்வாராக.

அஞ்ஞானத்தின் பயனாக ஜாதிக் கொடுமைகள் நாட்டில் மிகுந்திருக்கிறது. மனிதனுக்கு மனிதன் ஏற்றத் தாழ்வு பாராட்டப் படுகிறது. இந்தத் தீமை மறைவதற்கான பிரசாரங்கள் ஆங்காங்கு நடைபெற வேண்டும்.

வறுமை தலைவிரித் தாடிக் கொண்டு போகிறது. தலைவர்கள் ஏதேதோ செய்து பார்த்தும் இன்னும் பூரணமான சுதேசி யியக்கத்துக்கு ஆதரவு ஏற்பட வில்லை. தியாகிகளால் ஆரம்பிக்கப்பட்ட கதர்த் தொழிலைக் காத்து, நிராதரவான ஏழைகளுக்குக் கஞ்சி வார்ப்போமென ஒவ்வொருவரும் சபத மேற்றுக்கொள்ள வேண்டிய தினம் இதவே யாகும்.

ஆகவே இன்றைய தினத்திலிருந்து தேசியத் திருப்பணியில் ஈடுபட்டு தேசிய முன்னேற்றத்துக்குப் பாடுபடுவோம் என தியாகிகளின் பெயரால் சபதம் ஏற்போமாக!

இன்று மென்காளு மிவை செயத்தவறேன்
மெய்யிது. மெய்யிது. இவற்றை
என்றுமே தவறி யிழைப்பனே லென்னை
ஈசனுர் நாசமே புரிக.

பதர்களே! பாடங் கேளுங்கள்!

"தாய் நாட்டின் முன்னேற்றத்துக்கு இடைஞ்சலா யிருப்பது ஜாதிப் பகைமை! அந்தத் தீங்கைக் கருவறுப்பதென்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறேன். இந்தப் பிரயத்தனத்தில் எனது உயிரையும் அர்ப்பணம் செய்ய நான் தயார்" என்று டாக்டர் ஆலம் கல்கத்தாவில் கர்ஜனை செய்திருக்கிறார். முதல் நாள் தான் சிறையினின்று விடுதலை செய்யப் பட்டிருந்தும், பழைய சிறை வாழ்க்கையில் பிரசாதமாகக் கிடைத்த நோய் அவரை இன்னும் வருந்திக் கொண்டிருந்தும், சிறிதேனும் தளர்ச்சி யுறாமல் தேசப் பணியில் ஈடுபட்டுள்ள டாக்டர் மகமத் ஆலத்தைப் போற்றுகின்றோம். ஆனால் ஜாதிப் பகைமையை உதவியாகக் கொண்டு தேசத்தை அற்பக் காசுக்காக விற்றுக் கொண்டும், மனச்சாட்சியை அற்ப உத்தியோகங்களுக்காக விற்றுக்கொண்டு மிருக்கும் பதர்கள் டாக்டரிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ளலாகாதா?

காந்தியும் சர்ச்சிலும்

"எங்கள் பிரயத்தனத்துக்கு ஒத்துழைக்க மறுத்துக் கொண்டிருக்கும் மிஸ்டர் காந்தியும், இங்கிலாந்திலுள்ள மிஸ்டர் சர்ச்சிலும் ஒரே வகையினர் தான்" என்று ஸாமுயல் ஹோர் ஓரிடத்தில் பேசி யிருக்கிறார். எப்போதும் சமாதானமே நோக்கமாகக் கொண்ட உத்தமரை, பிரிட்டிஷார் நீதியை நம்பி இரண்டாவது வட்ட மேஜைக்குச் சென்று திரும்பிய முனிவரை, வேணுமென்றே சிறையிலும் போட்டு விட்டு இஷ்டப்படி பின்புறத்தினின்று பேசுவது என்ன நீதியோ தெரியவில்லை. ஹோருக்கு தைர்ய மிருக்குமாகில் உலகின் புற நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களை ஓரிடத்தில் கூட்டித் தனது கட்சியை எடுத்துக் கூறட்டும்.

ரகசியம் அதுவா?

மகாத்மா காந்தி எரவாடாச் சிறைக்குள் இரண்டு பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் வைத்துக் கொண்டிருக்கிறாரல்லவா? இதில் ஏதோ அபாயம் இருக்கிறது என்று, சர்ச்சில் கோஷ்டியார் இந்தியா மந்திரியிடம் ஆட்சேபித்துக் கொண்டிருப்பதாக, ஓர் குருவி கூறுகிறது. "காந்தி இது வரையில் பூலோகத்தில் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தார்; இனி ஆகாய மண்டலங்களிலும் அவர் உபதேசங்கள் பரவி, நமக்கு விரோதத்தைக் கிளப்பிவிடுவார்" என்பது அவர்கள் பயமாம்.

திருவண்ணுமலை நரபலி

இரண்டு வாரங்களுக்கு முன்னே தமிழ் நாட்டைத் திடுக்கிடச் செய்த செய்தி திருவண்ணுமலையில் நடந்த நரபலியாகும். ஒரு படையாச்சியார், கர்ப்பவதியா யிருந்த தமது மனைவியையும், குழந்தைகளையும் வெட்டிப் போட்டதுமன்றி, தானும் ஒரு மரத்தில் தூக்குப் போட்டுக் கொண்டு தொங்கி விட்டார். தேசத்தில் ஏற்பட்டுள்ள கொடுமையான வறுமையின் கூற்ருகவே திருவண்ணுமலையில் இந்த நரபலி நிகழ்ந்திருக்கிறது. இந்தக் கோர சம்பவத்தைப் பற்றி கல்கத்தா 'அட்வான்ஸ்' பத்திரிகை பின் வருமாறு எழுதி யிருக்கிறது:—

"சென்னை மாகாணத்திலின்று கோர சம்பவத்தைப் பற்றிய செய்தி யொன்று கிடைத்துளது. புனிதமான அந்த க்ஷேத்திரத்தின் மலை யடிவாரத்தில் ஏழு சரீரங்கள் இறந்து கிடந்தன. வறுமையின் கொடுமைக்கு ஆற்ருது புருஷன், மனைவி, இரண்டு சிறுவர், இரண்டு சிறுமிகள், ஒரு கைக்குழந்தை முதலியோர் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு செத்தன ரென்றே விளங்குகின்றது. இந்த ஒப்பந்தத்துக்கு வருவதற்குக் காரண மென்ன? பசி! பட்டினி! தற்போதுள்ள துரைத்தன ஆட்சி முறையின் தோல்வியின் அறிகுறியாகவே மேற்படி நிகழ்ச்சி நடந்தது போதும்! கேவலம் உயிரும் உடலும் ஒட்டி யிருப்பதற்கு அவசியமான தேவைகளும் ஒரு குடும்பத்துக்கு கிடைக்கவில்லை யெனின் அந்த நாட்டு மக்கள், அரசாங்கத்தைத் தானே குற்றங் கூற வேண்டும். 'சோறில்லை' என்ற காரணத்தால் ஒரே ஒரு மனிதன் இறந்தாலும் அந்த நாட்டை ஆளுகின்ற துரைத்தனத்துக்குத் தான் அது பெருத்த அவமானமாகும்."

செத்துப் போன குடும்பத்தைப் பற்றி கிடைத்துள்ள தகவல்களினின்று பணக் கஷ்டம் பொறுக்க முடியாததால் தான் மானியான அந்தக் குடும்பம் சாவை வலுவில் நாடியதாகத் தெரிய வருகிறது. ஏதோ இரண்டாயிரம் ரூபாய் கடன் வாங்கிய விஷயமாக பத்தாயிரம் ரூபா ஆஸ்தியை இழக்க நேரிட்டதாம். இதுவே அந்தப் படையாச்சியாரின் மனத்தை உடைத்தது போலும்! நாட்டின் தாங்கொணு வறுமையின் அறிகுறியாகவே திருவண்ணுமலையின் கோரக் கொலை நடந்தது என்பது உறுதி.

ஆளு மில்லை! காசு மில்லை!

விசாரணை ஏதும் செய்யாமல் ஒருவனைச் சிறைப்படுத்துவதா? "எங்கள் பிரிட்டிஷ் அரசு மிக்க நீதியான அரசு" என்று விடாமல் டோரிக் கூட்டம் ஜபம் செய்து கொண்டிருக்கிறது. ஆனல் அதே சமயத்தில் வங்காளத்தில் ஹிஜ்லி பக்ஸார் சிறைகளில் 949 பேர்களும், அநேக கிராமங்களில் 125 தேச பக்தர்களும், அவரவர்கள் வீட்டிலேயே 49 நபர்களும் சர்க்கார் காவலில் வைக்கப் பட்டிருக்கின்றனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட ஓர் கூட்டத்தை விசாரணை யின்றி சிறையில் போட்டிருப்பது சர்க்காருக்கு நீதியா? அப்படியே போட்டது தான் போட்டாய் விட்டது, அந்த நபர்களின் குடும்ப சம்ரட்சணைக்கு சர்க்கார் போதுமான உதவி செய்து வருகின்ருர்களா? அதுவு மில்லை. குடும்பத் தலைவனைக் கொண்டு போனதுமன்றி, குடும்பத்திற்குப் போதிய உதவியையும் சர்க்கார் செய்யாவிட்டால் அத்தனை பேரும் சாக வேண்டும் என்று அர்த்தமா? எத்தனை நாளைக்குத் தான் இவ்வாறு சிறையில் அடைத்து வைக்கப் போகின்றனர் என்பதையாவது சொல்லலாகாதா?

இந்த அநியாயத்தைப்பற்றி விவரித்து ஸ்ரீயுத சுபாஷ் சந்திர போஸ் "மாஞ்செஸ்டர் கார்டியன்" பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதினர். தம்மை இவ்வளவு காலம் அடைத்து வைத்திருந்த சர்க்கார் தமது குடும்பத்துக்குக் காலணு கூட உதவ வில்லை யென்பதையும் அக் கடிதத்தில் கண்டிருந்தார்.

இக் கடிதத்தை எழுதிய சுபாஷ் மீதும், கடிதத்தை வெளியிட்ட "மாஞ்செஸ்டர் கார்டியன்" பத்திரிகை மீதும் கல்கத்தா ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைக்கு ஆத்திரம் வந்து விட்டது. "மாஞ்செஸ்டர் சாமான்களை பகிஷ்கரிக்க வேண்டுமென்று கூறுகின்ற ஸுபாஷ் சந்திர போஸின் கடிதத்தை 'மாஞ்செஸ்டர் கார்டியன்' பிரசுரிக்கலாமா?" என்று உறுமுகிறது. அதாவது அநியாயங்கள் நடந்து கொண்டே தானிருக்கும்; ஆனல் அதை எவரும் வெளியிடக் கூடாது என்பது இந்த கல்கத்தா பத்திரிகையின் கருத்துப் போலும்!

இந்த மாதிரி அரசாங்க முறையின் மீதும் அதற்கு ஒத்து ஊதுகின்ற ஆங்கிலோ இந்திய பத்திரிகையின் மீதும் ஆயிரக் கணக்கான குடும்பங்களின் சாபமும், அதிருப்தியும் சரமாரியாகப் பொழிந்து கொண்டிருக்கிறதே; அதற்குப் பயனில்லாமற் போகுமா?

பதினேழு பம்பரங்கள்

ஆட்டி விட்டால்தான் ஆடும்; இல்லாவிடில் ஒரே வெறும் மரக் கட்டையாகக் கிடக்கும். இதுதான் பம்பரத்தின் இயல்பு. மனித வர்க்கத்திலும் சில பம்பரங்கள் இருக்கின்றன. பிரிட்டிஷ் ராஜிய வாதி அவ்வப்போது எடுத்து விளையாடுவதற்கு உபயோகமாக உள்ள சில இந்தியப் பம்பரங்களையே நாம் குறிப்பிடுகின்றோம்.

இது வரையில் கிழித்தது போதாதென்று இன்னும் என்னமோ சீமையில் ஆலோசிக்கப் போகின்றார்களாம். அந்தக் கூட்டுக் கமிட்டி மண்டபத்தில் ஆடுவதற்கு பதினேழு இந்தியப் பம்பரங்களை சர்க்கார் நோட்டம் போட்டிருக்கின்றனர். அந்த ஆட்களுக்கு அழைப்பு அனுப்பப் பட்டிருக்கிறதாம். 'ஆகட்டும்' என்று சொன்ன வுடனே 'கப்பல் பாஸ்' அனுப்ப வேண்டியதுதான் பாக்கி. சீமைக்கு ஊரார் செலவில் போய் வருகிறாயா வென்றால் 'மாட்டோம்' என்று பம்பரங்கள் சொல்லுமா?

ஹரிசிங் கவர், அப்துர் ரஹீம் என்ற இருவர் அஸ்ஸெம்பிளியினின்று போகப் போவதாகத் தெரிகிறது. தற்போதுள்ள அஸ்ஸெம்பிளி சபை இந்திய மக்களின் பிரதிநிதி சபையல்ல வென்பதை உலகம் அறியும்.

அடுத்தாற் போல சாப்ருவும், ஜயகரும்! இந்தியாவைப் பிடித்த இரண்டு தீராத வியாதிகளென்றே இவர்களைச் சொல்லலாம். இவர்களும் கட்டாயம் போயே தீருவார்கள். போகா விட்டால் மண்டை வெடித்துப் போகுமே, என் செய்வது. வானம் இடிந்தாலும், பூமி பிளந்தாலும் கலங்காது 'ஸலாம் ஆலேகும்' போடுகின்ற கஜ்னவி, பரசுராம பாத்ரோ, புருஷோத்தம தாஸ் இந்தப் பிரகிருதிகளைப் பற்றி வர்ணிக்கவே வேண்டாம். இந்த மாதிரி 17 ரகங்களை எப்படித்தான் சர்க்கார் தேடினார்களோ?

ஆனால் மேற்படி கூட்டுக் கமிட்டியில் யாராவது ஒரு பிரிட்டிஷ் பிரதிநிதி "உங்களை சர்க்கார் பொறுக்கிற்று? அல்லது இந்தியர் தேர்ந்தெடுத்தார்களா? தயவு செய்து நீங்கள் யாருக்குப் பிரதிநிதி என்று சொல்லுங்கள் பார்க்கலாம்" என்று கேட்டு விட்டால், அப்போது கெக்கப்பிக்கே என்று விழிக்க நேரிடுமே, அவமானப்பட நேரிடுமே என் செய்வது? வெட்கம் வாழைக்காய்க் கரியாகுமா?

எருமை முதுகில் மழை

இந்தக் காலத்தைத் 'தொழிலாளர் யுகம்' என்று சொல்லுவது வழக்கம். தொழிலாளர் கஷ்டங்களை நிவர்த்தி செய்தாலொழிய, தேசத்தில் செழிப்பும் அமைதியும் இருக்காது என்பதை நாகரிக நாடுகள் யாவும் உணர்ந்திருக்கின்றன. முக்கியமாக, வேலை யில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவோ, அல்லது "உலுப்பை முதலியவற்றின் மூலம் வேலையில்லாதோர் சிரமத்தைக் குறைக்கவோ, பிரிட்டன் உள்பட சகல நாடுகளும் முயற்சி செய்து கொண்டே யிருக்கின்றன. சமீபத்தில்தான் அமெரிக்காவில் ஒரு சட்டம் நிறைவேறியது. தொழிலாளர் வேலை நேரத்தை நாள் ஒன்றுக்கு ஐந்து மணியாக, அது செய்துள்ளது. இதன் முக்கிய நோக்கம் என்ன? வேலை யில்லாத பல்லாயிரக்கணக்கானவருக்கு தொழில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது தான்.

ஆனால், இந்திய அரசாங்கம் என்ன செய்கிறது? வேலை யில்லாத் தொல்லை நமது நாட்டில் இல்லை யென்பதில்லை. அது நாள்தோறும் பெருகிக்கொண்டு தானிருக்கிறது. என்றாலும், எருமை முதுகில் மழை பெய்தது போல, இந்திய சர்க்கார் "எவருக்கோ கல்யாணம், நமக்கு என்ன" என்று சும்மா இருந்து கொண்டிருக்கிறது. இந்தியச் சட்ட சபையில் "இந்தியாவில் வேலை யில்லாதவர்களின் எண்ணிக்கை என்ன?" என்று ஒருவர் கேள்வி கேட்டார். "தெரியாது" என்று சர்க்கார் தரப்பினர் கையை விரித்து விட்டார். பிரிட்டனில் வாரத்துக்கு வாரம் வேலையில்லாதோர் எண்ணிக்கையை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கு ஜன கணிதையின் போது வேலை யில்லாதோர் எண்ணிக்கையை எடுக்க முயன்றார்களாம்; முடியாது போயிற்றாம்! மற்ற நாடுகளில் முடிந்தது இங்கு என் முடியவில்லையோ? மனமிருந்தால் தானே இட மிருக்கும்?

"வேலை யில்லாதோர் சிரமத்தைக் குறைக்கச் சட்ட மியற்றப் போகிறீர்களா?" என்று கேட்டதற்கு, சர்க்கார் மெம்பர் "இல்லை; அது மாகாண அரசாங்கங்களின் நிர்வாகத்துக்கு உரிய விஷயம்" என்று கூறி விட்டார். தொழிலாளர் சம்பந்தமான சட்டங்களை இயற்ற மத்திய அரசாங்கத்தாருக்கே அதிகாரமுண்டு. என்றாலும், மாகாண அரசாங்கங்கள் யோசனை கூற வேண்டுமாம்! அதிகார மிருக்கும் மத்திய சர்க்காரே ஏன் முயற்சி யெடுத்துக் கொள்ளக் கூடாது?

முன்னுள்ள வேலை

(மகாத்மா காந்தி)

தாழ்ந்த வகுப்பில் பிறந்திருப்பினும் சட்ட சபை, முனிஸிபாலிட்டி முதலியவைகளில் ஸ்தானம் வகிப்பதால் சிலர் நல்ல ஸ்திதியில் இருந்து வருகின்றனர். அவர்கள் எந்த ஸ்திதியிலிருப்பினும் சரி, கோயில் பிரவேச உரிமை இல்லாத காரணத்தினால் 'இழிந்தவர்'களாகவே கருதப்பட்டு வருகின்றனர். ஸமூகத்தினின்று ஒதுக்கப்படுகின்றனர். அதன் பயனாக நிரந்தரமாக அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவே கருதப்படுகின்றனர். இந்த இடைஞ்சல்களைப் போக்கினால் மத சம்பந்தமாகவே தீண்டாமை ஒழிந்ததாகத் தான் அர்த்தம். இந்த ரீதியாகப் பார்க்கப் போனால், 'எத்தனை ஹரிஜனங்கள் கோயில் பிரவேசம் அவசியமென்று சொல்கிறார்கள்', 'எத்தனை பெயர்கள் பிற்காலத்தில், வழக்கமாகக் கோயில் தரிசனம் செய்வார்கள்' என்ற எண்ணங்களுக்கு இடமே யில்லை.

ஹிந்து மதத்தை நாம் சுத்தம் செய்வோமானால் 4 கோடி சகோதர ஹிந்துக்களுக்கு நாம் நியாயம் வழங்கியே தீர வேண்டும். ஆகவே சீர்திருத்த வேலையில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் பிரயத்தனங்களை விடாது நடத்தி வர வேண்டும். மசோதாக்கள் தொங்கலில் இருக்கின்றனவே யென்று வெறும் அயர்ச்சி கொள்ள வேண்டாம். ஆனால் வேறு ஏதேனும் ஒரு மகத்தான சக்தியின் காரணமாக ஹிந்து சமூகம் விழிப்படைந்து கொள்ளுமாயின் எனக்கு அது பரம திருப்தி தருவதாகும்.

அன்பர்கள் இச் சமயத்தில் செய்யக் கூடிய காரியங்கள் மூன்றுண்டு.

1. சட்ட ரீதியாக உள்ள தடைகளைப் போக்குவதின் அவசியத்தைப் பற்றி ஒரு பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்க வேண்டும்.

2. ஆங்காங்கு சொந்தக் கோயில்களை உடையவர்கள் ஹரிஜனங்களுக்கும் பகவத் தரிசனம் கிடைக்குமாறு அநுமதிக்க வேண்டும்.

3. எங்கெங்கு அவசியமோ, எங்கெங்கு பொது ஜனங்களின் பண உதவி கிடைக்கிறதோ அங்கெல்லாம் சர்வ ஹிந்துக்களும் பிரவேசிக்கும்படியானதாகவும், நமது பண்டைப் பெருமைகளில் குறையாததாகவும் அநேக புதுக் கோயில்களைக் கட்டி ஹரிஜனங்களுக்கு உதவ வேண்டும். —'ஹரிஜனம்.'

சிண்டை விடாதிருக்க—

ஐரோப்பிய நாடுகளெல்லாம் அநேகமாக அமெரிக்காவின் கடன்காரர்களாகவே யிருக்கின்றன. ஆனால், இந்த சர்வதேசக் கடன் விஷயம், உலகத்திற்கே பெருந் தொல்லையாகி விட்டது. இந்தக் கடன்களை யெல்லாம் ஒரேயடியாக ரத்து செய்தாலன்றி, உலகத்திற்கு கதி மோட்சம் கிடையாதென்று, அநேக பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள்.

இந்த நிலைமையில், அமெரிக்க ஐக்கிய சமஸ்தான வர்த்தக சபையார் சர்க்கார் உறுப்பினருக்கு ஒரு விண்ணப்பத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேண்டுகோளாவது:- "சர்க்கார் கடன்களை மறுபடியும் தற்காலிகமாக ஒத்திப் போட வேண்டுமானால், கடன்கார ராஜாங்கங்கள் தங்களால் பணம் செலுத்த முடியவில்லை என்பதை ருஜுப்படுத்த வேண்டும். நம் தேச நன்மைகளைத் தேடக் கூடிய பேச்சு வார்த்தைகளை நடத்த வேண்டும். கடன்கார நாடுகள் நமது நாட்டின் சாமான்களை ஏராளமாக வாங்க வேண்டும். அவைகள் தங்கள் ராணுவச் செலவைக் குறைத்துக் கொண்டால் நாம் அவற்றிற்குச் சலுகை காட்ட வேண்டும்."

எல்லாம் சரிதான். பிற நாடுகளைப் போலவே வியாபார மந்தத்திற்கு ஆளாகி விட்ட அமெரிக்காவும், தனது தொல்லையை நிவர்த்தித்துக் கொள்ள முயல்வது இயல்பு தான். ஆனால் கடனை வசூலிப்பது எவ்வாறு? கடன்கார நாடுகள் அமெரிக்காவின் சாமானையே வாங்கிக் கொண்டிருந்தால், அவற்றின் உள் நாட்டுத் தொழில்களின் கதி யென்ன? பழைய கடனைத் தீர்க்க வழியில்லாதிருக்கும் பொழுது, சாமான் வாங்கிப் புதிய கடன் சுமையையும் உண்டாக்கிக்கொண்டால், அவை என்று தான் மீள்வது? இவற்றைப் பற்றி யெல்லாம் அமெரிக்க வர்த்தகருக்குக் கவலையில்லை.

அமெரிக்கா தனது கடன்களைத் தள்ளிக் கொடுக்குமென்றோ, ரத்து செய்யுமென்றோ எதிர்பார்க்க இடமில்லை. ஏனென்றால், அது பிற நாடுகளின் "சிண்டுகளை என்றைக்கும் தன் கையிலேயே வைத்துக் கொண்டிருக்க வேண்டும்" என்றுதான் விரும்புகிறது. கையில் அகப்பட்டுக் கொண்ட ஐரோப்பாவின் சிண்டை அமெரிக்கா இனி விட்டு விடுமா?

‘படி தாண்டாப் பத்தினிகளா ?’

தங்கள் மார்க்கத்தின் புனித க்ஷேத்திரங்களைத் தரிசிப்பதற்காக இஸ்லாமிய சகோதரர்கள் அவ்வப்போது ‘ஹஜ்’ யாத்திரை போவது வழக்கம். இந்தியாவை விட்டு துருக்கிஸ்தானத்துக்குப் போகப் புறப்படுகின்றவர்கள் முதன் முதலில் இந்திய துரைத்தனத்தின் பெருந் தயவை சம்பாதித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. சர்க்கார் தயவு கிடைக்காதவர்களுக்கு ‘ஹஜ்’ யாத்திரை தகராறுதான்.

சமீபத்தில் மிஸ்டர் கஸ்னாவி என்ற மகமதிய சகோதரருக்கு ‘ஹஜ்’ யாத்திரைக்கான (பாஸ்போர்ட்) அநுமதிச் சீட்டைக் கொடுக்க இந்திய துரைத்தனம் மறுத்து விட்டதாம். இது சம்பந்தமாக டெல்லி சட்ட சபையில் கேட்கப்பட்ட கேள்விகளும், கிடைத்த பதில்களும் கவனிக்கத் தக்கவை.

கேள்வி :—மிஸ்டர் ஹஸரத் மோகினி, மிஸ்டர் இஸ்மேல் கஸ்னாவி போன்றாருக்கு ‘ஹஜ்’ யாத்திரை செல்ல பாஸ்போர்ட் கொடுக்கப்படாதது வாஸ்தவமா ?

சர்க்கார் பதில் :—மிஸ்டர் கஸ்னாவிக்கு மட்டும் சீட்டு மறுக்கப்பட்டது. அவர் அதி தீவிரமான ராஜீய அபிப்பிராயங்களை உடையவராயிருக்கிறார். ‘இஸ்லாம் மதத்துக்கு பிரிட்டிஷ் அரசு விரோதமானது’ என்று சென்ற ஜனவரி மாதத்தில் கூட அவர் எழுதியிருக்கிறார். அப்பேர்ப்பட்டவரைத் தடுக்க வேண்டியது தானே !

கேள்வி :—தன்னுடைய மதக் கடமைகளை செய்யும் ஒருவனை சர்க்கார் தடுப்பானேன்?

சர்க்கார் பதில் :—மிஸ்டர் கஸ்னாவி ஏற்கனவே பதினெட்டுத் தடவை மெக்காவுக்குப் போய் விட்டு வந்திருக்கிறாரே ! (சபையில் சிரிப்பு)

இந்த வினா விடைகளினின்று இந்திய சர்க்காரின் போக்கு வெளியாகின்றது. ‘நாங்கள் மத அனுஷ்டானங்களில் தலையிட மாட்டோம்’ என்று சர்க்கார் தற்புகழ்ச்சி செய்து கொள்வதெல்லாம் வெறும் வார்த்தைகள் தான். இந்தப் ‘படி தாண்டாப் பத்தினி’ சமயம் வந்த போது தாண்டிக் குதித்துக் கொண்டு தானிருக்கிறாள். எவ்வெப்போது அவசியமோ அப்போதெல்லாம் ஜனங்களின் மதக் கொள்கைகளில் நுழைவதற்கு சர்க்கார் தயங்குவதில்லை. ‘ஹஜ்’ போவது முஸல்மானின் மதக் கடமை. அவன் அதைச் செய்யக் கூடாதென்று தடுத்தால் மதத்தில் சர்க்கார் நுழைந்ததாகத்தான் அர்த்தம். அரசியல் நோக்கமுடைய சர்க்காருக்கு ‘மதமும் ஒன்றுதான் ; வெண்டைக்காயும் ஒன்றுதான்’ என்று தோன்றுகிறது. ஆனால் படி தாண்டாப் பத்தினி என்று தற்புகழ்ச்சி செய்து கொள்வானேன் ?

இது மட்டுமன்று ; பர்மாவில் பௌத்த பிக்ஷு ஒருவர் வெகு நாளாக புத்த மதப் பிரசார சம்பந்தமாக ஜர்மனிக்குப் போக வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருப்பதாகவும், ஆனால் அவருடைய பழைய ராஜீயக் கொள்கைகளின் காரணமாக அவருக்கு பாஸ்போர்ட் கொடுக்க முடியாதென சர்க்கார் மறுத்திருப்பதாகவும் பத்திரிகைகளில் படித்தோம். அதே மாதிரி அமெரிக்காவில் உள்ள சைலேந்திரநாத் கோஷ் என்பார், ஜன்ம பூமியாகிய பாரத நாட்டை வந்து தரிசிக்க வேண்டுமென்று பல தடவை பிரிட்டிஷ் சர்க்காருக்கு விண்ணப்பம் போட்டுக் கொண்டேயிருக்கிறார். பிரிட்டிஷ் சர்க்கார் பாஸ்போர்ட் கொடுத்தார்களில்லை.

ஆகவே பிரிட்டிஷ் சர்க்காருக்கு தங்கள் இராஜீயக் கொள்கைக்கு எதிர் அபிப்பிராயம் உடையவர்களை ‘பாஸ்போர்ட்’ என்ற ஆயுதத்தைக் கொண்டு தண்டிப்பதுதான் நோக்கமே தவிர வேறில்லையென்பதும், அந்தத் தண்டனையினால் மத விஷயங்களில் தலையிடுவதானாலும் பின் வாங்கார்களென்பதும் விளங்குகிறது. நிற்க,

அன்று மிஸ்டர் கஸ்னாவி சம்பந்தமான கேள்வி கேட்கப்பட்ட போது ‘அவர் 18 தரம் மெக்கா போய் வந்திருக்கிறாரே’ என்று சர்க்கார் அதிகாரி அகட விகடம் பேசினார். இதென்ன கேலிப் பேச்சா? கஸ்னாவி 18 தடவை போனாலென்ன? 100 தடவை போய் வந்தாலென்ன? அதைக் கேட்க இந்த அதிகாரி யார்? இந்தப் பதினெட்டு தடவை கஸ்னாவி ‘ஹஜ்’ போய் வந்ததினால் பிரிட்டிஷ் அரசாங்கம் கிடுகிடுத்து விடாதிருக்கும் போது இப்போது மட்டும் அவருடைய ‘ஹஜ்’ யாத்திரைக்கு சர்க்கார் பயப்படுவானேன் ?

‘ஹிந்து’வின் தலையறட்டைத் தனம்!

காங்கிரஸ் மகா சபையின் கௌரவத்திற்குக் கேடு விளைவிக்கும் நோக்கத்தோடு ‘ஹிந்து’ பத்திரிகை அன்று எழுதிய ஓர் தலையங்கத்துக்கு சென்னை “சுயராஜ்யா” பத்திரிகை பலமான சவுக்கடி தந்திருக்கிறது. அதன் சுருக்கம் பின்வருமாறு:—

“சர்க்கார் அதிகாரியான ஸர் ஹாரி ஹெயிக் துரைக்கு ஆதரவு தேட மவுண்ட்ரோடு ‘ஹிந்து’ பத்திரிகை முனைந்திருப்பதைக் கண்டு கொஞ்சம் ஆச்சரிய மடைந்தோம். முன்னுக்குப் பின் முரணாகவும், தப்பர்த்தம் கற்பனை செய்வதாகவும் ‘ஹிந்து’ எழுதியிருக்கிறது. சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்திவிட வேண்டு மென்றும், இந்திய சுதந்திரத்துக்காக ஒற்றுமையாக தேசியவாதிகள் நிற்க வேண்டு மென்றும் ‘ஹிந்து’ யோசனை சொல்லி யிருக்கிறது..........இன்று தேசத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குக் காரணம் சர்க்காருடைய போக்கு தான். சர்க்காருடைய கொள்கை தான் மாற வேண்டும்........ இவ்வாறு தேச அபிவிர்த்திக்கான ஏதாவது ஓர் ஆலோசனையை ‘ஹிந்து’ சொல்லி யிருக்கிறதா வென்று அது பொழிந்துள்ள 2½ பத்திகளையும் படித்துப் பார்த்தும் ஒன்றும் காணப்படவில்லை. ஆனால் காங்கிரஸைத் தூஷிப்பதற்காக, தன்னுடைய சூழ்ச்சி மிகுந்ததான வழியில் ‘ஹிந்து’ ஏதேதோ எழுதியிருக்கிறது!

“அநேக ராஜீய திட்டங்களில் ஒற்றுமை ஏற்பட முடியாதபடி காங்கிரஸ் சட்ட மறுப்பியக்கம் செய்து விட்டது” என்று ஹிந்து எழுதி யிருக்கிறது. இது வெறும் பச்சைப் பொய்! இத்தகைய வரிகளை ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள் கூட எழுதுவதற்குத் தயங்கும். சர்க்கார் கூட இந்த மாதிரி சொன்னதில்லை............

யார் சட்ட மறுப்பை நிறுத்த முடியும்? சிறையிலுள்ள தலைவர்கள் ஒப்பந்தம் கொடுத்துவிட்டு வெளியே வருவார்களென நினைப்பது பயித்தியக்காரத்தனம். வெளியே யுள்ள காங்கிரஸ்காரர்கள் கூடுவதற்கும் அநுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் யாரால் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியும்? நாளைக்கு மகாத்மா காந்தி, பண்டித ஜவஹர்லால் முதலிய தலைவர்கள் வெளியே வந்து என்ன சொல்வார்களோ?...........

கூட்டம் கூடும் உரிமையைக் கூட இழந்துள்ள ஒரு காங்கிரஸ் மகா சபைக்கு யோசனை சொல்லித் தருவதை விட, தனது செல்வாக்குக்குப் பாத்திரமான சர்க்காருக்குப் புத்தி சொல்லித் தந்து, அடக்குமுறை யாட்சியை வாபீஸ் வாங்கிக் கொள்வதற்கு ‘ஹிந்து’ முயற்சி செய்யுமாக! கூட்டுக் கமிட்டிக்கு ஓர் காங்கிரஸ்காரனைக் கூட சர்க்கார் அழைக்காததைப்பற்றி ஒரு கண்டன வார்த்தை சொல்வதற்கு ஹிந்துவுக்கு வாயில்லாமற் போகவா வேண்டும்? இதென்ன திடீரான மாற்றம்?

துப்பறியும் புலிசன்!

மிஸ்டர். ஆர். எஸ். சர்மா, ஸி. ஐ. இ. என்பார் அஸ்ஸெம்பிளியில் சர்க்காருக்குத் தான் போன்றவர். ‘அஸ்லென்ஸோல்’ ஸ்டேஷனில் அவரையும் காங்கிரஸைச்சேர்ப் போகும் ஒரு பிரதிநிதியாக நினைத்து ஒரு ஸி. ஐ. டி. உத்யோகஸ்தர் கைது செய்து விட்டார். பாவம்! தாம் ஒரு ஸி. ஐ. இ. பட்டம் பெற்றவன் என்று அவர் ஸி. ஐ. டி. யிடம் விவரித்த பின்புதான் விடுதலை கிடைத்தது. இந்த மாதிரி ஸி. ஐ.இ. பட்டம் பெற்றவரின் பாடே இப்படி இருக்குமானால் ‘கான்’, ‘ராய் பகதூர்’ முதலிய சில்லறைப் பட்டம் வாங்கினவர்கள் எந்த மூலை?

இதைவிட கேலிக்கூத்து இன்னொன்று உண்டு. மாறுவேடமணிந்து செல்லும் ஒரு ஸி.ஐ.டி. இன்ஸ்பெக்டரின்மீது சந்தேகப்பட்டு இன்னொரு துப்பறிபவன் அவரைக் கைது செய்து விடுவதாக வைத்துக் கொள்வோம். அது ஒரே குளறல்தான்! ஆகவே இனி ஸி. ஐ. டி களையும், ஸி. ஐ. இ. களையும் காப்பாற்றும் நோக்கத்தோடு ஒரு சங்கம் ஏற்படுவது அவசியமென்று தோன்றுகிறது.

—பம்பாய் கிரானிகள்.

யாருடைய நிழலோ?

ஸி. ஐ. டி. இலாக்காவைச் சேர்ந்த அஸிஸ்டென்ட் ஸப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் காளி சாங்குலி என்பவர் கான்பூரிலிருந்து ஹௌராவுக்கு ரயிலில் போய்க் கொண்டிருந்தார். போலீஸ்காரர் அவரைக் காங்கிரஸ் பிரதிநிதி என்று சந்தேகித்து, கையைப்பிடித்து வெளியே இழுத்து விட்டார்களாம். அடுத்த வண்டியில் தான் அவர் போக முடிந்ததாம். அவர் யாருடைய நிழலாய்ப் போய்க் கொண்டிருந்தார் என்பது தெரியவில்லை. ஒரு காங்கிரஸ் பிரதிநிதியையே அவர் தொடர்ந்து கொண்டிருந்திருப்பாராயின், அவர் கைதியான காட்சி ஒரு முதல் தரத் தமாஷா யிருந்திருக்கு மல்லவா?

தடை உத்திரவு

சட்ட மறுப்பு இயக்க சம்பந்தமாகவும் ஜெயிலில் இருப்பவர்கள் சம்பந்தமாகவும் இன்னும் ராஜீய விஷயங்களைப் பற்றியும் உள்ள தாவல்களை வெளியிடக் கூடாதென்று 'பிரீ பிரஸ்' சொந்தக்காரரான சதானந்தருக்கு பம்பாயில் ஒரு தடை யுத்திரவு சாதரா செய்யப்பட்டிருக்கிறது.

சிந்துவில் உள்ள ஹைதராபாத் நகரில் சென்ற பல வருஷங்களாக வசித்து வரும் வியாபாரியான பி. எல். பிள்ளைக்கு, 24 மணி நேரத்துக்குள் ஹைதராபாத்தை விட்டு வெளியே போய்விட வேண்டுமென்றும், 17ம் தேதி சென்னை போலீஸ் கமிஷனர் முன்பு ஆஜராக வேண்டுமென்றும், உத்திரவன்னியில் சென்னையை விட்டு வெளியே போகக் கூடாதென்றும், சட்ட மறுப்பு இயக்கத்தில் கலந்து கொள்ளக் கூடாதென்றும் உத்திரவு சாதரா செய்யப்பட்டது. ஸ்ரீமான் பிள்ளை சென்னைக்குப் போக முடியாதென்று அறிவித்து விட்டாராம். அவர் சட்ட மறுப்பு இயக்கத்தில் ஏற்கனவே தண்டனை யடைந்தவர்.

கைதியானூர்கள்

வத்தலக்குண்டு என்னும் ஊரில் துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக ஒருவரும், பொள்ளாச்சிக் கடுத்த நெகமத்தில் நஞ்சப்ப கவுண்டர் என்பவரும் கைதியானூர்கள்.

பிரிட்டிஷ் யந்திரங்களுக்கு ஆர்டர் செய்ததற்காக ஆமதாபாத்தில் உள்ள ஒரு மில்லில் மறியல் செய்த 5 பேர் கைதியானூர்கள்.

தண்டனை

நாமக்கல்லில் கைதியான அங்கண்ணனும், பழனியப்பனும் கிரிமினல் லா சட்டப்படி தலா 1 வருஷம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்கள்.

கராச்சியை விட்டு வெளியேறக் கூடாதென்ற உத்திரவை மீறியதற்காக 4 தொண்டர்களுக்கு கோர்ட்டு கலையும் வரையில் காவல்.

பம்பாயில் காங்கிரஸ் ஆஸ்பத்திரி தாதியான ஸ்ரீமதி விஜய லக்ஷ்மி பென், காந்தி தினக் கொண்டாட்ட சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டு, இரண்டு குற்றங்களுக்காகவும், 9 மாதம் தண்டனை விதிக்கப்பட்டார்.

விடுதலை

சேத் ஜம்னுலால் பஜாஜ் தண்டனை காலம் முடியுமுன்பே விடுதலை செய்யப்பட்டு விட்டார். சென்ற வருஷத்தில் ஒரு வருஷம் சிறைவாசமும், 500ரூ. அபராதமும் விதிக்கப்பட்டார். அதைப்பற்றி ஒரு நிருபர் காரணம் கேட்டபோது யாரோ 250 ரூ. தனக்காக அபராதம் கட்டி விட்டதாகவும், அவர் இன்னுர் என்று இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை யென்றும் கூறினூராம்.

உத்திரவை மீறியதாக

கல்கத்தா காங்கிரஸுக்குச் சென்ற லாகூர் ஜன ஊழிய சங்கக் காரியதரிசி லாலா ஜகன்னுதருக்கு 6 மாதமும், 50 ரூபாய் அபராதமும். இந்திய அச்சுக்கூட சட்டப்படி நடக்கும் விசாரணைக்கு வராததற்காக போக்ராவில் இருவர்களுக்கு வாரண்டு பிறப்பிவிக்கப்பட்டது.

சேரியில் கிணறுகள்

லால்குடிக்குச் சமீபத்திலுள்ள ஆங்கரை கிராமத்தில் பள்ளச் சேரியிலும், பறச் சேரியிலும் ஸ்ரீமதி மீனுக்ஷியம்மாள் இரண்டு கிணறுகள் வெட்டிக் கொடுத்திருக்கின்ருர். கள் குடிப்பதை நிறுத்தி விட்ட சேரிக்கு, தான் ஒரு கிணறு வெட்டிக் கொடுப்பதாக டாக்டர் சாஸ்திரி கூறினூராம்.

கள்ளிக்கோட்டையில் சில தொண்டர்கள் சில ஹரிஜனங்களோடு ஒரு கோவிலுக்குச் சென்ருர்கள். கோவிலுக்கு ஒரு பர்லாங்கு தூரத்தில் பணம் போடுவதற்காக ஒரு உண்டியல் வைக்கப்பட்டிருந்தது. ஸ்வாமி தரிசனம் செய்யக் கோவிலுக்குள் அனுமதித்தால் தான் நாங்கள் காசு போடுவோ மென்று சிலர் நின்று விட்டனர். சிலர் காசு போடுவதை மறியல் செய்தனர். அவர்கள் கோவிலுக்குச் சென்று கொண்டிருக்கும்பொழுது பல ஹிந்துக்கள் அவர்களின் பேரில் பாய்ந்து அடித்துக் காயப் படுத்தினூர்களாம். ஒரு பி. ஏ. வகுப்பு மாணவருக்கு நல்ல அடி.

தஞ்சை ஜில்லாவிலிருந்து கொழும்புக்கு அரிசி ஏற்றுமதி செய்வோருக்கு அநுகூலமாகும்பொருட்டு இலங்கை கவர்ன்மெண்டு ரயில்வே அதிகாரிகள் தற்காலிகமாக 3 மாத காலத்துக்கு 100க்கு 16 விதம் ரயில்வேக் கட்டணத்தைக் குறைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.